[11th December 1959

THE HON. SRI P. KAKKAN வைகை அணைத் தேக்கத்தில் புதிதாக வரக்கூடிய தண்ணீரும் சேர்த்து 2,300 கன அடி தண்ணீர் அதிகப்படியாக சேர்த்து வைக்கப்படும். மேலும் இதிலிருந்து ராமநாதபுரத்திலுள்ள . . .

MR. SPEAKER: When hon. Members put supplementary questions, they should put it in such a way that the Minister can answer them straightaway. If they want to have such complicated figures, they must give sufficient notice to the Ministers. Otherwise, I do not think it will be fair to the Ministers and to this House also. I request the hon. Members to be reasonable. They may clearly specify the points one by one in their question and give notice of the same to the Ministers in advance.

* 106 *Q.*—SRI T. L. SASIVARNA THEVAR (on behalf of SRI D. SUBRAMANIA RAJAKUMAR): Will the Hon. the Minister for Works be pleased to state—

(*a*) the names of the villages in Sivaganga taluk that will be benefited by the Vaigai Project Canal Scheme through the Shieldkal and the Lessieskal;

(*b*) whether the villages already benefited by these kals have been excluded now; and

(*c*) if so, the names of the villages and the reasons for excluding them?

THE HON. SRI P. KAKKAN: (*a*) A statement [a] showing the names of the villages in Sivaganga taluk that will actually get the benefit of the Vaigai Project Scheme with reference to the supply available for new areas through the Shieldkal and the Lessieskal is placed on the table of the House.

(*b*) & (*c*) Information is not available at present, and it requires detailed investigation to collect the information about the villages under Lessieskal and Shieldkal, which were having the benefit of drainage and seepage flows from the Periyar Project ayacut.

SRI K. RAMACHANDRAN: ஸார், இந்த பெரியாறு அணையிலிருந்து ஷீல்டுகால் கால்வாய் வழியாக முன்னால் 50 கிராமங்களுக்கு பாசன வசதி செய்து கொடுக்கப்பட்டதாக தெரிகிறது. ஆனால் இப்போது 15 அல்லது 20 கிராமங்களுக்குத்தான் பாசன வசதி செய்து கொடுக்கப்படுவதாக தெரிகிறது. இதற்கு காரணம் என்ன? மேலும் முன்போலவே, கொடுத்துக்கொண்டிருந்த எல்லா கிராமங்களுக்கும் பாசன வசதி கொடுக்க அரசாங்கம் முயற்சி எடுக்குமா?

THE HON. SRI P. KAKKAN: அரசாங்கம் இதில் நன்றாக பரிசீலனை செய்தபின்தான் சிக்கனமாக தண்ணீர் கொடுக்க வேண்டும் என்று கருதி, பல கண்மாய்கள் வழியாக விவசாயத்தை பெருக்குவதற்கு தண்ணீர் கொடுக்கப்பட்டு வருகிறது. இவ்விதம் கொடுத்து வருவதால் யாருக்கும் பாதகம் இருக்கும் என்று தோன்றவில்லை.

---

[a] Printed as Appendix II on page 548 infra.

11th December 1959]

SRI T. L. SASIVARNA THEVAR : வைகை பிராஜக்ட்டிலிருந்து ராமனுதபுரம் ஜில்லாவில் எவ்வளவு ஏக்கர்களுக்கு தண்ணீர் பாய்ச்சுவது என்று திட்டமிடப்பட்டிருந்தது?

THE HON. SRI P. KAKKAN : முதலில் கிட்டத்தட்ட 7,000 ஏக்கர் என்று கணக்கிடப்பட்டிருந்தது.

SRI R. SRINIVASA IYER : ஸார், முதலாவது இந்த வைகைத் திட்டம் அமுல் செய்யப்பட்டபோது தண்ணீர் சப்ளை செய்வதற்கு போதிய வாய்க்கால் இல்லை என்று சொல்லப்பட்டது. இப்போது அதற்கான வாய்க்கால்கள் எல்லாம் வெட்டப்பட்டு விட்டனவா? இல்லையென்றால் அதற்கான நிலங்கள் எல்லாம் ஆர்ஜிதம் செய்யப் பட்டு விட்டனவா? அதற்கான நடவடிக்கைகளை எல்லாம் எடுத்தாய் விட்டதா என்பதை தெரிவிக்க வேண்டுகிறேன்.

THE HON. SRI P. KAKKAN : இந்தத் திட்டத்திற்காக அதிகப் படியான வாய்க்கால்கள் வெட்டவேண்டிய தேவையில்லை. ஏற் கனவே இருக்கிற வாய்க்கால்கள் போதுமானது, அதோடு பல கண்மாய்கள் மூலமாகவும் எந்தவிதமான கஷ்டமும் இல்லாமல் தண்ணீர் சப்ளை செய்வதற்கு அரசாங்கம் திட்டமிட்டிருக்கிறது

SRI T. L. SASIVARNA THEVAR : வைகைத் திட்டத்திலிருந்து ராமனுதபுரம் மாவட்டத்திற்கு 10,000 ஏக்கருக்கு தண்ணீர் சப்ளை செய்ய வேண்டுமென்று ஒதுக்கிவைத்த தண்ணீரிலிருந்து கம்பம் தேக்கத்திற்கு ஆயிரம் ஏக்கருக்கும் மேலூர் தேக்கத்திற்கு 2,000 ஏக்கருக்கும் தண்ணீர் எடுத்துக்கொள்ளப்பட்டது வாஸ்த வமா?

THE HON. SRI P. KAKKAN : வைகை அணைக்கட்டின் மூலம் 20,000 ஏக்கருக்குத் தண்ணீர் பாய்ச்ச வேண்டுமென்று முதலிலேயே திட்டமிட்டிருந்தார்கள். பிற்பாடு பெரியார் 'லேக்கை' ஆழப் படுத்தும் காரணத்தால் 4,000 ஏக்கருக்குத் தண்ணீர் கொடுக்க வேண்டியிருந்தது. முதலில் சிவகெங்கை தாலுகாவிற்கு 7,000 ஏக்கருக்குத் தண்ணீர் கொடுக்க வேண்டுமென்ற நோக்கத் துடன்தான் இந்த 20,000 ஏக்கருக்குத் தண்ணீர் விட வேண்டும் என்று திட்டமிடப்பட்டது. இதிலிருந்துதான் மேலூருக்கு 2,000 ஏக்கருக்குத் தண்ணீர் கொடுக்கப்பட்டது. பெரியாறு லேக்கில் தண்ணீர் இல்லாததால் கம்பம் மக்கள் கஷ்டப்பட்டதால் கம்பத்திற்கும் இதிலிருந்துதான் ஆயிரம் ஏக்கர் கொடுக்கப் பட்டது. அவர்களுடைய கோரிக்கையை அரசாங்கம் பரிசீலித்து தண்ணீர் கொடுத்தது.

SRI K. RAMACHANDRAN : வைகைத்திட்டம் அமைக்கப் பட்டபோது கிழக்கு ராமனுதபுரம் பகுதி மக்கள் தங்கள் பகுதிக் குத் தண்ணீர் கிடைக்காமல் போய்விடும் என்று ஆட்சேபணை எழுப்பியபோது கனம் மந்திரிகள் அம்மாதிரி ஏற்படாது என்று உறுதிமொழி கொடுத்தார்கள். இப்போது அந்த மக்கள் கூறியது போல அந்தப் பகுதிக்குத் தண்ணீர் வராமல் போய்விடும் போலத் தோன்றுகிறதே! கனம் அமைச்சர்கள் அந்த உறுதிமொழியை எப்படிக் காப்பாற்றப் போகிறுர்கள்?

THE HON. SRI P. KAKKAN : கனம் அங்கத்தினருக்கு இந்த விஷயம் நன்றாகத் தெரியும். நாங்கள் கொடுத்த உறுதிமொழிக்கிணங்க நாங்கள் நடந்துகொண்டு வருகிறோம். வாய்க்காலில் வரும் தண்ணீரை எவ்வளவு தூரம் தடுத்து நிறுத்தி அப்பகுதி மக்களுக்கு உதவ முடியுமோ அவ்வளவு தூரம் உதவி வருகிறோம்; சில சமயம் பெரியாறு ஆயக்கட்டுத் தண்ணீரைக் கொடுத்து உதவுவது கனம் அங்கத்தினருக்குத் தெரியும் என்று நம்புகிறேன்.

SRIMATHI A. S. PONNAMMAL : வைகை ஆற்றிலிருந்து திருமங்கலம் போகக்கூடிய வாய்க்காலில் 1,000 ஏக்கர் நீர்ப்பாசன வசதி வேண்டும் என்று குருவித்துறையிலிருந்து அரசாங்கத்திற்கு மகஜர் வந்திருக்கிறதா? மகஜர் வந்திருந்தால், அதன் பேரில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது?

THE HON. SRI P. KAKKAN எற்கெனவே, ராமநாதபுரம் ஜில்லா விவசாயிகள் எங்களுக்குத் தண்ணீர் வரவில்லை, எங்களுககுத் தண்ணீர் வேண்டும் என்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். கனம் அங்கத்தினர் இப்போது நிலக்கோட்டைத் தாலுகாவிற்குத் தண்ணீர் கேட்கிறார். இதெல்லாம் பரிசீலனையில் இருக்கிறது.

'Motels'

* 114 *Q.*—SRI V. K. KOTHANDARAMAN (on behalf of SRI K. SATTANATHA KARAYALAR) : Will the Hon. the Minister for Works be pleased to state whether this Government have considered the desirability to open 'Motels' on important Highways in the State and the decision taken on it?

THE HON. SRI P. KAKKAN : No, Sir.

SRI A. A. RASHEED : Is the Hon. Minister aware that by establishing 'Motels' Government will attract more tourists to our State?- 'Motel' is a hotel.

THE HON. SRI P. KAKKAN : At present, the Chief Engineer (Highways) considers that when long distance travel is encouraged, it will be useful to try a few 'Motels' in places of halt, rest, check-up, etc.

Statues in the Marina

* 117 *Q.*—SRI V. K. KOTHANDARAMAN : கனம் பொது மராமத்து அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) சென்னை பீச்சில் ஏற்படுத்தப்பட்டுள்ள காந்தி சிலைக்காகவும், "உழைப்பின் வெற்றி" சிலைக்காகவும் எவ்வளவு தொகை ஒதுக்கப்பட்டது?

(ஆ) இதுவரை எவ்வளவு தொகை செலவு செய்யப்பட்டது?

(இ) காண்ட்ராக்டருக்கு விடப்பட்டதா அல்லது டிபார்ட்மெண்டு மூலம் கட்டப்பட்டதா?